DIRECTOR OF RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ
3 APR 2017
CHENNAI-600 015

**சுருக்கம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் – தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றம் – தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தினை மாற்றியமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை

அரசாணை (நிலை) எண். 44 நாள்: 03 .04.2017

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மஅதி.1) துறை, நாள் 14.09.2006
2. அரசாணை (நிலை) எண்.10, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மஅதி.1) துறை, நாள் 6.02.2007
3. அரசாணை (நிலை) எண்.118, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மஅதி.1) துறை, நாள் 11.07.2008
4. அரசாணை (நிலை) எண்.51, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மஅதி.1) துறை, நாள் 18.06.2009
5. அரசாணை (நிலை) எண்.64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மஅதி.1) துறை, நாள் 01.07.2013
6. அரசாணை (நிலை) எண்.134, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மஅதி.1) துறை, நாள் 24.03.2014
7. அரசாணை (நிலை) எண்.25, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மஅதி.1) துறை, நாள் 16.02.2015
8. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடிதம் ந.க.எண்.47688/2013/எம்.ஜி.என்.ஆர்.இ.ஜி.எஸ்.II–2, நாள் 24.05.2016 மற்றும் 28.03.2017.

*******

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டச் செயல்பாட்டினைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றம் அமைத்து அதில் மாண்புமிகு அமைச்சர் ( ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை) அவர்கள் தலைமையில் 10 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 15 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

...2

2. இதனைத் தொடர்ந்து மேலே இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து மற்றும் ஆறில் படிக்கப்பட்ட அரசாணைகளில் பல்வேறு கால கட்டங்களில் தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றக்குழு மாற்றி அமைக்கப்பட்டன.

3. இறுதியாக, மேலே ஏழாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்கண்ட 8 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 15 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமனம் செய்து திருத்திய ஆணை வெளியிடப்பட்டது:

அலுவலர் சார்ந்த உறுப்பினர்கள்:

1. தலைமைச் செயலாளர் (தலைவர் இல்லாத போது குழுமத்தில் தலைவராக பணியாற்றுவார்)
2. முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
3. முதன்மைச் செயலாளர், நிதித் துறை
4. செயலாளர், பொதுப்பணித் துறை
5. செயலாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை
6. செயலாளர், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை
7. செயலாளர், வேளாண்மைத் துறை
8. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் – அமைப்பாளர்.

அலுவல் சாரா உறுப்பினர்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | பாராளுமன்ற உறுப்பினர் | – | 2 |
| 2. | சட்டமன்ற உறுப்பினர் | – | 2 |
| 3. | மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் | – | 1 |
| 4. | ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் | – | 2 |
| 5. | கிராம ஊராட்சித் தலைவர் | – | 6 |
| 6. | தொழிலாளர் மற்றும் நலிவுற்றோருக்கான அமைப்புகள் | – | 2 |
| | மொத்தம் | – | 15 |

4. மேலே எட்டாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், மத்திய அரசு 28.02.2017 அன்று நடைபெற்ற மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர் வரவு செலவு மதிப்பீடு ஒப்புதலளிக்கும் கூட்டத்திலும் மற்றும் 22.03.2017 அன்று நடைபெற்ற காணொளி காட்சி கூட்டத்திலும் மாநில வேலை உறுதி மன்றத்தினை சீரமைத்தும் அதன் கூட்டத்தினை கூட்டி அதன் நடவடிக்கைகளை(Minutes) மத்திய அரசுக்கு அனுப்பும்படி தெரிவித்துள்ளது. உச்சநீதிமன்ற மனு எண்.857/2015, நாள் 22.03.2017ல் வெளியிட்டுள்ள தீர்ப்பின்படி, மாநில வேலை உறுதி மன்றம் அமைக்கப்படாத மாநிலங்களில், மாநில வேலை உறுதி மன்றத்தினை அமைக்கவும், மாநில வேலை உறுதி மன்ற கூட்டத்தினை உடனடியாக கூட்டி அதன் நடவடிக்கைகளை மத்திய அரசுக்கும், உச்சநீதிமன்றத்திற்கும் அனுப்பும்படி வலியுறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

5. பார்வை 7-ன்படி நியமிக்கப்பட்ட திரு.ஒ.கே.சின்னராஜ், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி, திரு.மு.ரெத்தினசாமி, திருவையாறு சட்டமன்றத் தொகுதி ஆகியோரது பதவி காலம் முடிந்ததாலும் 2016ஆம் ஆண்டில் தமிழக சட்டமன்றத் பொதுத் தேர்தல் நடைபெற்று புதிய

...3

சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாலும் அலுவல் சாரா உறுப்பினர் பதவிக்கு திருவாளர்கள் ஓ.கே.சின்னராஜ், மு.ரெத்தினசாமி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், மேட்டுப்பாளையம்/திருவையாறு ஆகியோருக்கு பதிலாக புதிதாக இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் நியமனம் செய்ய 24.05.2016 நாளிட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. இந்நிலையில், அக்டோபர் 2016ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்களின் பிரதிநிதிகளின் பதவி காலம் முடிவுற்று தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தின் 9 அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் நிறைவுபெற்றது. தற்போது கீழ்கண்டவாறு தனி அலுவலர் நிலையில் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு பதிலாக அரசு அலுவலர்கள் பொறுப்பேற்று பணியாற்றி வருகின்றனர்.

| பதவி | எண்ணிக்கை | தனி அலுவலர் பொறுப்பு |
|---|---|---|
| மாவட்ட ஊராட்சி குழு தலைவர் | 1 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, |
| ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் | 2 | உதவி இயக்குநர் (நிலை அலுவலர்கள்) |
| கிராம ஊராட்சி தலைவர் | 6 | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) |
| மொத்தம் | 9 | |

உள்ளாட்சி தேர்தல்கள் நடைபெற்று ஊராட்சிகளின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு மேற்காணும் 9 அலுவல் சாரா உறுப்பினர் பதவிகளுக்கு புதிய உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றம் சீரமைக்கப்படவேண்டும். எனவே, தற்போது அரசு அலுவலர்கள் தனி அலுவலர்களாக பொறுப்பேற்றுள்ள நிலையில், 9 அலுவல் சாரா உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளை நியமிக்க இயலாத நிலை உள்ளது. இந்நிலையில், அரசாணை(நிலை) எண்.25, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.02.2015ன்படி அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்திற்கு புதிதாக 2 பாராளுமன்ற உறுப்பினர்களையும், 2 சட்டமன்ற உறுப்பினர்களையும் 2 புதிய தொழிலாளர் மற்றும் நலிவுற்றோருக்கான அமைப்புகளையும் நியமனம் செய்து, தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தினை சீரமைத்து ஆணை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தினை பின்வருமாறு மாற்றியமைத்து அரசு ஆணையிடுகிறது:

தலைவர் : மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டச் செயலாக்கம்)

அலுவல் சார் உறுப்பினர்கள் :

1. தலைமைச் செயலாளர்,
   (தலைவர் இல்லாத போது குழுமத்தில் தலைவராக பணியாற்றுவார்)
2. முதன்மைச் செயலாளர்,
   ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
3. முதன்மைச் செயலாளர், நிதித் துறை

...4

4. முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை

5. முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை

6. முதன்மைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை

7. வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை செயலாளர், வேளாண்மைத் துறை

8. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் – அமைப்பாளர்

அலுவல் சாரா உறுப்பினர்கள்

(1) பாராளுமன்ற உறுப்பினர்கள் (இரண்டு)

1. திரு.எ.அருண்மொழி தேவன்,
கடலூர் பாராளுமன்றத் தொகுதி, கடலூர் மாவட்டம்

2. திரு.சி.மகேந்திரன்,
பொள்ளாச்சி பாராளுமன்றத் தொகுதி,
கோயம்புத்தூர் மாவட்டம்

(2) சட்டமன்ற உறுப்பினர்கள் (இரண்டு)

1. திரு.அ.சண்முகம்,
கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி, கோயம்புத்தூர் மாவட்டம்

2. திரு.கே.எஸ்.விஜயகுமார்,
கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, திருவள்ளுர் மாவட்டம்

(3) தொழிலாளர் மற்றும் நலிவுற்றோருக்கான அமைப்புகள் (இரண்டு)

1. சாந்தி ஆசிரமம், கோவைபுதூர், கோயம்புத்தூர் 641 042

2. ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம்

//ஆளுநரின் ஆணைப்படி//

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைச் செயலாளர், சென்னை – 9
முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை – 9

முதன்மைச் செயலாளர், நிதித் துறை, சென்னை – 9
முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை, சென்னை – 9
முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை – 9
முதன்மைச் செயலாளர், கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, சென்னை – 9
வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை செயலாளர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15
திரு.எ.அருண்மொழி தேவன், கடலூர் பாராளுமன்றத் தொகுதி, கடலூர் மாவட்டம்
திரு.சி.மகேந்திரன், பொள்ளாச்சி பாராளுமன்றத் தொகுதி, கோயம்புத்தூர் மாவட்டம்
திரு.அ.சண்முகம், கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி, கோயம்புத்தூர் மாவட்டம்
திரு.கே.எஸ்.விஜயகுமார், கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, திருவள்ளூர் மாவட்டம்
சாந்தி ஆசிரமம், கோவைபுதூர், கோயம்புத்தூர் 641 042(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15 வழியாக)
ரிவார்டு சொசைட்டி, விழுப்புரம்(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15 வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக) (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15 வழியாக)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள். (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15 வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை 6/18/35.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை, சென்னை – 15.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 108.

<u>நகல்:</u>

முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
முதன்மைச் செயலாளர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (ந.நி. (ம) ஊ.வ. சிறப்பு திட்டச் செயலாக்கம் ) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை – 9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மை செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை – 9.
தேசிய தகவல் மையம், சென்னை – 9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (அ.ந.2) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/4/17
பிரிவு அலுவலர்
3/4/17